Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
tamilmakkalkurall@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான இல்லம்
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | சனிக்கிழமை, ஆகஸ்ட் 03, 2024 | இதழ் 112

# “பள்ளத்தில் நிற்போரைப் படிகளில் ஏற்றாதவர்கள் படிகளில் ஏறி நிற்க வேண்டாம்!” - கழகத் துணைப் பொதுச் செயலாளர் அந்தியூர் செல்வராஜ், ஆதிதிராவிடர் நலக்குழுத் துணைத் தலைவர் - அமைச்சர் மதிவேந்தன் ஆகியோர் கூட்டறிக்கை





சென்னை, 03 ஆகஸ்ட் 2024: 'அருந்ததியர் உள் இடஒதுக்கீடு செல்லும்' என்ற உச்ச நீதிமன்றத் தீர்ப்பை வரவேற்று அறிக்கை விட்டிருக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் திரு. பழனிசாமி அவர்கள். அருந்ததியர் சமூகத்தினர் மீது அதிமுகவுக்கு ஏன் திடீர் பாசம்? அந்த சமூகத்திற்கு திமுக அரசு உள் ஒதுக்கீடு வழங்கிய நேரத்தில், ஏன் ஜெயலலிதா எதிர்த்தார்? என்கிற வரலாற்றை அவர் தெரிந்து கொள்ள வேண்டும்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் 2008 ஜனவரி 23-ஆம் தேதி சட்டமன்றத்தில் ஆளுநர் பர்னாலா அவர்கள் உரை நிகழ்த்தினார். அந்த உரையின் 34-ஆம் பக்கத்தில் 53-வது பத்தியில், 'அருந்ததியர் வகுப்பினர் சமூகப் பொருளாதார நிலையில் அடித்தளத்தில் இருப்பதால், அவர்தம் முன்னேற்றத்திற்குச் சிறப்புச் சலுகைகள் அளிப்பது அவசியம் எனக் கருதி, தற்போது ஆதிதிராவிடருக்கு வழங்கப்பட்டு வரும் இட ஒதுக்கீட்டில் இவர்களுக்குத் தனி உள் ஒதுக்கீடு வழங்குவது பற்றி, அனைத்து கட்சிகளையும் கலந்தாலோசித்து முடிவு செய்ய இந்த அரசு கருதியுள்ளது' எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. அருந்ததியர் சமூகத்தினருக்கு ஏற்றம் தரும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அறிவிப்பு வெளியான அந்த ஆளுநர் உரையைத்தான் அன்றைய எதிர்க்கட்சியான அதிமுக உறுப்பினர்கள் புறக்கணித்து, அவையை விட்டு வெளிநடப்பு செய்தார்கள். இன்றைக்கு உச்ச நீதிமன்றத் தீர்ப்பை ஆதரிப்பவர்கள், அன்றைக்கு ஏன் எதிர்த்தார்கள்?

ஆளுநர் உரையில் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற, 2008 மார்ச் 12-ஆம் தேதி அனைத்து கட்சி கூட்டத்தை முதல்வர் கலைஞர் அவர்கள் கூட்டினார். அதில், அதிமுக சார்பில் ஜெயக்குமாரும், கே.பி.அன்பழகனும் கலந்து கொண்டார்கள். புதிய தமிழகம் கட்சித் தலைவர் கிருஷ்ணசாமி மட்டும் வெளிநடப்பு செய்தார். கூட்டத்தின் இறுதியில், உள் ஒதுக்கீடு குறித்துப் பரிந்துரைக்க ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதியைக் கொண்ட ஒரு நபர் குழுவை அமைக்க முடிவு செய்யப்பட்டு, தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

அனைத்துக் கட்சி கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி நீதியரசர் ஜனார்த்தனம் ஆணையத்தை 2008 மார்ச் 25-ஆம் தேதி கலைஞர் அவர்கள் அமைத்தார்கள். அதன் பிறகு 2008 நவம்பர் 27-ஆம் தேதி கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் நீதியரசர் ஜனார்த்தனம் அளித்த அறிக்கை குறித்து விவாதிக்கப்பட்டது. அந்த அமைச்சரவைக் கூட்டத்துக்கு நீதியரசர் ஜனார்த்தனம் அவர்களும் அழைக்கப்பட்டு, அவர் விரிவாக அமைச்சரவை கூட்டத்தில் விளக்கினார். ஆதிதிராவிடர்களுள் கடைநிலையில் உள்ள அருந்ததியர்க்கு உள் ஒதுக்கீடு வழங்குவது குறித்த நீதியரசர் ஜனார்த்தனத்தின் விரிவான அறிக்கையை அமைச்சரவை பரிசீலித்தது. ஆதிதிராவிடர்களுக்கு வழங்கப்பட்டு வரும் 18 சதவிகித இட ஒதுக்கீட்டில், அருந்ததியர் சமூகத்திற்கு மூன்று சதவிகித இட ஒதுக்கீடு வழங்கலாம் என்ற பரிந்துரையைக் கொள்கை அடிப்படையில் ஏற்றுக் கொள்வதென்றும், அந்த இட ஒதுக்கீட்டின் செயலாக்கம் குறித்து அமைச்சரவைக் குழு ஆய்வு செய்வதென்றும் அந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. அமைச்சரவையின் முடிவுக்கு எதிராக ஜெயலலிதா வெகுண்டு எழுந்தார். அனைத்துக் கட்சி கூட்டத்தில் பங்கேற்ற அதிமுக அந்தக் கூட்டத்தில் எந்த முடிவும் சொல்லவில்லை. அதனை அந்தக் கூட்டத்தில் உரையாற்றிய கலைஞர் அவர்கள் சுட்டிக் காட்டி பேசும் போது, ''அதிமுகவின் முடிவு மட்டும் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. அதுவும் ஒத்துப் போகக் கூடிய முடிவாகத்தான் இருக்கும்'' என்றார். ஆனால், ஒத்துப் போகாத முடிவைத்தான் அன்றைக்கு ஜெயலலிதா தலைமையிலான அதிமுக எடுத்தது. உச்ச நீதிமன்றத் தீர்ப்பை வரவேற்று, திமுகவைச் சீண்டி அறிக்கை விட்டிருக்கும் திரு. பழனிசாமி அவர்களே, எம்.ஜி.ஆர் மாளிகையில் இருக்கும் அம்மையார் ஜெயலலிதா வெளியிட்ட அறிக்கைகளின் கோப்புகளில் 2008 நவம்பர் 29-ம் தேதி அறிக்கையை எடுத்து கொஞ்சம் புரட்டி பாருங்கள். அதில், ஜெயலலிதா என்ன சொல்லியிருந்தார் தெரியுமா? ''ஆதிதிராவிடர் இட ஒதுக்கீடு தொடர்பாக முடிவு எடுக்கும் அதிகாரம் மத்திய அரசுக்கு மட்டும்தான் இருக்கிறது. மத்திய ஆட்சி முடிவு பெறும் நிலையில் அதற்கான அறிவிப்பை வெளியிட்டிருப்பது அருந்ததியின மக்களை ஏமாற்றும் செயலாகும். அதனால் அருந்ததியினர் நம்பி ஏமாற வேண்டாம்'' என ஜெயலலிதா அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

அருந்ததியினர் சமூகத்திற்கு உள் ஒதுக்கீடு கிடைப்பதை விரும்பாத ஜெயலலிதா, ''ஆதிதிராவிடர் இட ஒதுக்கீடு தொடர்பாக முடிவு எடுக்கும் அதிகாரம் மாநில அரசுக்கு இல்லை'' என்று அப்பட்டமாகப் பொய் சொன்னார். ஆனால், அதனை கலைஞர் அரசு சாதித்துக் காட்டி, அந்தச் சமூகத்திற்கு உள் ஒதுக்கீடு வழங்கியது. இன்று உச்ச நீதிமன்றம் அளித்திருக்கும் தீர்ப்பில், 'எஸ்சி பட்டியலில் உள்ள சாதிகளைப் பிரித்து உள் ஒதுக்கீடு வழங்குவதற்கு மாநில அரசுகளுக்கு அதிகாரம் உள்ளது' என்று சொல்லி, ஜெயலலிதாவின் பொய்யை அம்பலப்படுத்தியிருக்கிறது. இந்த பின்னணியில் திரு. பழனிசாமி வெளியிட்டிருக்கும் அறிக்கை முரண்பாடுகளின் மொத்த உருவம். 'அருந்ததியர் உள் இட ஒதுக்கீடு செல்லும் என்று வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பை வழங்கியுள்ள உச்சநீதிமன்றத்திற்கு நெஞ்சார்ந்த நன்றி' எனச் சொல்லியிருக்கிறார் பழனிசாமி. 'தமிழக அரசு, 2009-ஆம் ஆண்டு அருந்ததியர்களுக்கு 3 சதவீத உள் இட ஒதுக்கீடு வழங்கியது' என அறிக்கையில் திரு. பழனிசாமி குறிப்பிட்டிருக்கிறார். அந்தத் தமிழக அரசு, திமுக அரசு எனச் சொல்ல எடப்பாடிக்கு என்ன தயக்கம்? உச்ச நீதிமன்ற தீர்ப்பு வெளியாகி 48 மணி நேரம் கழித்து அறிக்கை விட்டிருக்கிறார். 'அம்மா வழியில் நடக்கும் அரசு', 'அம்மா வழியில் நடக்கும் கழகம்' என மூச்சுக்கு முந்நூறு தடவை சொல்லிக் கொண்டிருக்கும் பழனிசாமி, 'அருந்ததியர் உள் ஒதுக்கீடு வழங்க மாநில அரசுக்கு அதிகாரம் இல்லை' என்று ஜெயலலிதா சொன்னதற்கு மாறாக, இப்போது ஆதரித்து அறிக்கை விடலாமா? என மந்திராலோசனை நடத்தினாரா? உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை வரவேற்றால், அம்மாவின் முடிவையே எதிர்ப்பது ஆகாதா? என ஆலோசனை எல்லாம் நடத்தி முடித்துவிட்டு, அறிக்கை விட்டிருக்கிறாரா? அப்படி வெளியிட்ட அறிக்கையில் திமுகவையும் வசை பாடியிருக்கிறார்.

'அருந்ததியின மக்களை வஞ்சிக்கின்ற வகையில் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் அருந்ததியர் உள் இட ஒதுக்கீட்டைப் பறிக்கும் வகையிலான வழக்குகள் 2010-ஆம் ஆண்டு திமுக ஆட்சியில் திட்டமிட்டுத் தாக்கல் செய்யப்பட்டன' எனக் கடைந்தெடுத்த பொய்யைச் சொல்லியிருக்கிறார் திரு. பழனிசாமி. அதனை யார் தாக்கல் செய்திருப்பார்கள் என்பது அதிமுகவுக்கே நன்றாகத் தெரியும். ஏன் என்றால், ''ஆதிதிராவிடர் இட ஒதுக்கீடு தொடர்பாக முடிவு எடுக்கும் அதிகாரம் மாநில அரசுக்கு இல்லை'' என்று ஜெயலலிதா அடித்துச் சொன்னதற்குப் பின்னால்தான் அந்த வழக்குகள் போடப்பட்டிருக்கிறது. 'அருந்ததியர் உள் இட ஒதுக்கீடு வழக்கு உச்ச நீதிமன்றத்திற்குச் சென்ற போது எனது அரசு, அருந்ததியர் உள் இட ஒதுக்கீடு பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக, மூத்த வழக்கறிஞர்கள் நியமிக்கப்பட்டுத் திறம்படக் கருத்துக்களை எடுத்துரைத்தனர். அதனால்தான் 2020-ஆம் ஆண்டு உச்சநீதிமன்ற நீதியரசர் அருண் மிஷ்ரா தலைமையிலான 5 பேர் கொண்ட அரசியல் சாசன அமர்வு, அருந்ததியர் உள் இட ஒதுக்கீட்டிற்குச் சாதகமான இடைக்காலத் தீர்ப்பை வழங்கியது' எனச் சொல்லியிருக்கிறார் திரு. பழனிசாமி. அருந்ததியர் உள் இட ஒதுக்கீட்டிற்கு திமுக அரசு விதை போட்டு, அது வளர்ந்து பழமாகும் வரையில் எதிர்த்துவிட்டு, அந்த பழம் அருந்ததியர் சமூகத்தின் கையில் கிடைக்கப் போவது தெரிந்ததும், சொந்தம் கொண்டாட வந்துவிட்டார் திரு. பழனிசாமி. அதிமுக எடுத்த முட்டுக்கட்டைகள், முன்னெடுப்புகள் எல்லாம் வரலாற்றில் அழியாத பக்கங்கள். அதனை அந்தச் சமூக மக்கள் மறக்க மாட்டார்கள். மன்னிக்க மாட்டார்கள். 2008 நவம்பர் 23-ஆம் தேதி கலைஞர் அவர்கள் எழுதிய கவிதையில்,

கழிவுற்ற மலத்தைக் கைகளில் அள்ளி ஶ்ரீ கண் கலங்க ஒரு தொழிலாளி; தலையில் சுமந்து தன் நிலையை நினைத்து நடக்கும் காட்சி இன்னமும் நடக்குதே நாட்டில்! தலையில், கையில் மலம் தூக்குவோர் தலைவிதி மாற்றிட தலையில் தூக்கி சனார்த்தனம் அறிக்கையை வைத்துக்கொண்டு ஆடுகின்றேன் நான்

பள்ளத்தில் கிடப்போரைப் படிகளில் ஏற்றி வைக்க; பணி புரிவோம் தொடர்ந்து! பகுத்தறிவைத் துணை கொண்டு நடந்து! எனக் குறிப்பிட்டார்.

அந்த பகுத்தறிவைத் துணைக் கொண்டு ஆட்சி நடத்தும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அரசு, எடுத்த முன்னெடுப்புகளால்தான் வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பை உச்சநீதிமன்றத்தில் பெற்றிருக்கிறோம். பள்ளத்தில் கிடப்போரைப் படிகளில் ஏற்றி வைத்திருக்கிறோம். அருந்ததியர் உள் ஒதுக்கீட்டை எதிர்த்துவிட்டு படிகளில் ஏறி நிற்க அதிமுக வெட்கப்பட வேண்டும்.




PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

# ரூ.30 கோடியில் புனரமைக்கப்பட்ட கிண்டி சிறுவர் இயற்கை பூங்கா: முதல்வர் மு க ஸ்டாலின் திறந்து வைத்தார் தமிழ்நாட்டில் 3063 யானைகள்; கணக்கெடுப்பு அறிக்கை வெளியிட்டார்






சென்னை, 03 ஆக்ஸ்ட் 2024: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று கிண்டி சிறுவர் பூங்கா 30 கோடி ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்டு, பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ள கிண்டி சிறுவர் இயற்கை பூங்காவை திறந்து வைத்தார். மேலும், ஒருங்கிணைந்த யானைகளின் கணக்கெடுப்பு -2024 அறிக்கையை வெளியிட்டார்.

கிண்டி சிறுவர் பூங்கா சென்னையிலுள்ள முக்கிய சுற்றுச்சூழல் சுற்றுலாத்தலங்களில் ஒன்றாகும், ஆண்டுதோறும் 7 முதல் 8 லட்சம் பார்வையாளர்கள் வருகை தருகின்றனர். மேலும், சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள நூற்றுக்கணக்கான பள்ளிகளைச் சேர்ந்த 60 ஆயிரத்து-க்கும் மேற்பட்ட மாணவர்கள் பூங்காவில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் பங்கேற்கின்றனர்.

இப்பூங்கா திறப்பு விழாவின்போது, வனவிலங்குகளை மீட்பதற்கும், வனப்பகுதிகளில் ஏற்படும் காட்டுத்தீ போன்ற விபத்துகளை தடுக்கும் பணிகளை மேற்கொள்வதற்காகவும் 9 நவீன வாகனங்களை முதலமைச்சர் கொடியசைத்து தொடங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து, இப்பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள வேடந்தாங்கல் பறவைகள் இருப்பிடத்தை திறந்து வைத்து, பூங்காவில் ஏற்படுத்தப்பட்டுள்ள மேம்படுத்தப்பட்ட பல்வேறு வசதிகளை பார்வையிட்டார்.

தமிழ்நாட்டிலேயே முதன்முறையாக இந்தப் பூங்காவில் 2,800 சதுர மீட்டர் பரப்பளவில் மிகப்பெரிய நீர்வாழ் பறவைக் கூடம், வன உயிரின விழிப்புணர்வு மையம், விலங்குகள் மற்றும் பறவைகளின் விவரங்கள் அறிந்துகொள்ளும் வகையிலான எல்இடி மின் திரைகள், நூலகம், நிர்வாக கட்டடம், அழகிய நுழைவுவாயில், நீருற்றுகள், செல்பி பாயிண்ட், குழந்தைகளுக்கான விளையாட்டுப் பகுதி, மழை நீர் வடிகால் வசதிகள், நடைபாதைகள், சிசிடிவி கண்காணிப்பு கேமராக்கள் போன்ற வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும், பார்வையாளர்களுக்கு உணவு மற்றும் சிற்றுண்டி கிடைக்கும் வகையில் நவீன கட்டமைப்புடன் கட்டப்பட்டுள்ள இரண்டு சிற்றுண்டி கூடங்கள், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையங்கள், புதிய கழிவறைகள், மேம்படுத்தப்பட்ட வாகனம் நிறுத்துமிடம் போன்ற வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. அத்துடன், மாற்றுத் திறனாளிகள் மற்றும் முதியோர்களுக்கு ஏற்ற வகையில் அவர்களின் தேவைகள் அறிந்து இப்பூங்காவில் சிறப்பு வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

தென்னிந்திய மாநிலங்களான கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு மற்றும் ஆந்திரப்பிரதேசத்தின் எல்லையோர மாவட்டங்களில் ஒருங்கிணைந்த யானைகள் கணக்கெடுப்பு 23.5.2024 முதல் 25.5.2024 வரை நடத்தப்பட்டது. இந்த கணக்கெடுப்பு தமிழ்நாட்டில் உள்ள 26 வனப் பிரிவுகளில் நடத்தப்பட்டது. இக்கணக்கெடுப்பில் 1,836 வனத்துறை ஊழியர்கள் மற்றும் 342 தன்னார்வலர்கள், என மொத்தம் 2,178 நபர்கள் ஈடுபட்டனர்.

இந்த கணக்கெடுப்பில், சேகரிக்கப்பட்ட தகவல்கள் முறையாக பகுப்பாய்வு செய்யப்பட்டு, 26 வனப் பிரிவுகளில் யானைகளின் எண்ணிக்கை மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த கணக்கெடுப்பானது யானைகளின் எண்ணிக்கை, பாலின விகிதம், யானைகளின் இயக்கவியல் மற்றும் யானைகளின் வாழ்விடத்தை சிறப்பாக நிர்வகிப்பதற்கு யானைகளின் பயன்பாட்டின் பரப்பளவு பற்றிய தெளிவான விவரங்களை வழங்கும்.

தமிழகத்தில் யானைகளின் எண்ணிக்கையையும் அதன் வாழ்வியல் முறைகளையும் அறிந்துகொள்ள உதவிடும் 2024 ம் ஆண்டிற்கான ஒருங்கிணைந்த யானைகள் கணக்கெடுப்பு அறிக்கையை முதலமைச்சர் இன்றைய தினம் வெளியிட்டார்.

2017 ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி தமிழகத்தில் யானைகளின் எண்ணிக்கை 2,761 ஆக இருந்தது. முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான அரசு பொறுப்பேற்றத்திலிருந்து யானைகளின் பாதுகாப்பிற்காக மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக ஒருங்கிணைந்த யானைகள் கணக்கெடுப்பு அறிக்கை 2023-ன் படி தமிழகத்தில் யானைகளின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 961 ஆக உயர்ந்தது. தற்போது அதன் தொடர்ச்சியாக, 2024 ம் ஆண்டிற்கான யானைகள் கணக்கெடுப்பு அறிக்கையின்படி தமிழகத்தில் தற்போது யானைகளின் எண்ணிக்கை 3063 ஆக உயர்ந்துள்ளது.

தமிழ்நாடு அரசு மேற்கொண்ட பல்வேறு வன உயிரின பாதுகாப்பு நடவடிக்கைகள், குறிப்பாக யானைகள் பாதுகாப்பு இயக்கத்தின் மூலமாக மேற்கொண்ட நடவடிக்கைகள் வாயிலாக தமிழ்நாட்டில் யானைகள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அகத்திய மலை யானைகள் காப்பகம், தமிழ்நாடு யானைகள் பாதுகாப்பு இயக்கம், யானைகள் வாழிடங்களை பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல் போன்ற தமிழ்நாடு அரசின் நடவடிக்கைகளும் இதற்கு காரணமாக விளங்கின என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் க.பொன்முடி, மா.சுப்பிரமணியன், எம்.மதிவேந்தன், மேயர் ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, துணை மேயர் மு. மகேஷ் குமார், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா,

வனத்துறை முதன்மைச் செயலாளர் பி.செந்தில் குமார், சுற்றுச்சூழல் துறை இயக்குநர் ஆ.ர. ராகுல் நாத், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் சுதான்சு குப்தா மற்றும் தலைமை வன உயிரினக்காப்பாளர் ஸ்ரீனிவாஸ் ஆர்.ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



விவசாயிகளுக்கு இலவசமாக வண்டல் மண் வழங்கும் திட்டத்தின் மூலம் பயனடைந்த தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம் குமாரகிரி ஊராட்சியைச் சேர்ந்த விவசாயி திரு.பட்டு முருகேசன் என்பவர் 660 கொள்ளவு கொண்ட வண்டல் மண்ணை தனது விவசாய நிலத்தில் பயன்படுத்தப்படவுள்ளதை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கோ.லட்சுமிபதி, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் தூத்துக்குடி மாவட்ட கணிப்பாய்வு அலுவலர் / அரசு செயலர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாடு திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (03.08.2024) பார்வையிட்டார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சு.அஜய்சீனிவாசன் அவர்கள், தூத்துக்குடி வருவாய் கோட்டாட்சியர் திரு.ம.பிரபு அவர்கள், அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் இன்று (03.08.2024), தூத்துக்குடி மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டங்கள் குறித்து அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் தூத்துக்குடி மாவட்ட கணிப்பாய்வு அலுவலர் / அரசு செயலர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாடு திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கோ.லட்சுமிபதி, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. உடன் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையாளர் திரு.லி.மதுபாலன், இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சு.அஜய்சீனிவாசன் அவர்கள், தூத்துக்குடி வருவாய் கோட்டாட்சியர் திரு.ம.பிரபு அவர்கள், அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.








தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் இன்று (03.08.2024), தூத்துக்குடி மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டங்கள் குறித்து அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் தூத்துக்குடி மாவட்ட கணிப்பாய்வு அலுவலர் / அரசு செயலர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாடு திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கோ.லட்சுமிபதி, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. உடன் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையாளர் திரு.லி.மதுபாலன், இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சு.அஜய்சீனிவாசன் அவர்கள், தூத்துக்குடி வருவாய் கோட்டாட்சியர் திரு.ம.பிரபு அவர்கள், அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி



# பலி 344 ஆக உயர்வு 9328 பேர் மீட்பு வயநாடு நிலச்சரிவில் 24 தமிழர்கள் பலி; 25 பேர் மாயம் மோப்ப நாய்களுடன் 5வது நாளாக மீட்பு பணி

சென்னை, 03 ஆக்ஸ்ட் 2024: வயநாடு நிலச்சரிவில் 24 தமிழர்கள் உயிரிழந்துள்ளது தெரிய வந்துள்ளது. 25 பேரை காணவில்லை என்றும் கூறப்படுகிறது. 5வது நாளாக மீட்புப்பணி தொடர்ந்து நடந்து வருகிறது.

நிலச்சரிவு மீட்பு நடவடிக்கைக்காக தமிழகத்தில் இருந்து 2 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் கேரளா மாநிலத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டு உள்ளனர். அவர்கள் அங்கு சென்று ஆய்வு செய்ததில், வயநாட்டில் வசித்த தமிழர்கள் 21 பேர் மற்றும் தமிழகத்தில் இருந்து வேலைக்கு சென்ற 3 பேர் என மொத்தம் 24 பேர் உயிரிழந்துள்ளது தெரியவந்துள்ளது. 25 பேரை காணவில்லை எனவும், 130 பேர் நிவாரண முகாம்களில் தஞ்சமடைந்துள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

கேரளாவின் வயநாடு பகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 344 ஆக அதிகரித்துள்ளது. ரேடார் மற்றும் மோப்ப நாய்கள் உதவியுடன் 5வது நாட்களாக மீட்பு பணிகள் முழு வீச்சில் நடந்து வருகின்றன.

வயநாடு பகுதியில் கடந்த 30ம் தேதி அதிகாலை பெருமழை காரணமாக முண்டக்கை, சூரல்மலை, அட்டமலை, நூல்புழா பகுதிகளில் கடும் நிலச்சரிவு ஏற்பட்டது. மேலும் காட்டாற்று வெள்ளம் பெருக்கெடுத்தது. இந்த சம்பவத்தில் அந்த இடங்களில் இருந்த நூற்றுக்கணக்கான வீடுகள் மண்ணுக்குள் புதைந்தன. வீடுகளில் அதிகாலை நேரத்தில் தூங்கிக் கொண்டிருந்த பொதுமக்கள் காட்டாற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டனர். நூற்றுக்கணக்கான மக்கள் உயிரோடு மண்ணில் புதைந்தனர். மண்ணில் புதையுண்டவர்களை மீட்கும் பணியிலும், சாலியாற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டவா□களின் உடல்களைத் தேடும் பணியிலும் தேசிய பேரிடர் மீட்பு படையினர் மட்டுமின்றி, முப்படையை சேர்ந்த வீரர்களும்களமிறக்கப் பட்டனர். தொடர்ந்துகாட்டாற்று வெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்டு பலியான வர்களின் உடல்கள் மீட்கப்பட்டன. தோண்டத் தோண்ட மனித உடல்கள் சிக்கியபடியே இருந்ததால் பலி எண்ணிக்கை உயர்ந்தபடி இருந்தது.

மொத்தம் 640 குழுக்கள் தேடுதல் பணியில் ஈடுபடுத்தப்பட்டன. அவர்களது மீட்பு மற்றும் தேடுதல் பணி



இன்று 5-வது நாளாக நீடித்தது. நவீன யந்திரங்கள், மேம்படுத்தப்பட்ட சென்சார் கருவிகள் உள்ளிட்டவைகளை பயன்படுத்தி சேறு மற்றும் இடிபாடுகள் குவிந்து கிடக்கும் பகுதிகளில் தேடுதல் தொடர்கிறது.

இன்றைய தேடுதலில் மண்ணுக்குள் புதைந்து கிடந்த மேலும் சிலரது உடல்களும் மீட்கப்பட்டன. நிலச்சரிவில் இதுவரை 344 பேர் உயிரிழந்துள்ளனர். 200-க்கும் மேற்பட்டோர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டுள்ளனர். பல்வேறு மருத்துவமனைகளில் அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. 250 பேரை காணவில்லை. அவர்களை தீவிரமாக தேடி வருகிறார்கள். அவர்களில் பலர் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

மீட்பு பணியில் ஈடுபட்டுள்ள ராணுவ மேஜர் ஜெனரல் வி.டி. மேத்யூ கூறும்போது, "பாதிக்கப்பட்ட இடங்களில் சிக்கியிருந்த மக்களை மீட்கும் பணி ஏறத்தாழ நிறைவடைந்துவிட்டது. இப்போது உடல்களை தேடும் பணியில் மட்டுமே ஈடுபட்டிருக்கிறோம். எனினும், தெர்மல் ஸ்கேனரை பயன்படுத்தி, யாரேனும் உயிருடன் இருக்கிறார்களா என்றும் தேடி வருகிறோம்" என்றார். இந்த பணியும் நேற்று இரவு வரை நடந்த நிலையில் யாரும் உயிரோடு இருப்பதாக சிக்னல் எதுவும் கிடைக்கவில்லை. இதனால் அந்த முயற்சி நேற்று இரவு கைவிடப்பட்டது.

தெர்மல் ஸ்கேனர் மட்டுமன்றி, ட்ரோனில் ரேடார் பொருத்தி தேடும் பணியும் தீவிரப்படுத்தப்பட்டு உள்ளது. நிலச்சரிவால் உருவான மண்மேடுகளில் யாராவது சிக்கி உள்ளனரா என்பதை கண்டறிய மாயமானவா□களின் தொலைபேசி 'ஜிபிஎஸ் சிக்னல்' வாயிலாக அவா□களின் கடைசி இருப்பிடத்தைக் கண்டறிந்து, மோப்ப நாய்களுடன் உதவியுடன் அவர்களின் உடல்களை மீட்கும் பணிகள் தொடர்ந்து நடந்து வருகிறது. ஏற்கெனவே 6 மோப்ப நாய்கள் தேடும் பணியில் ஈடுபடுத்தப்பட்டன. தொடர்ந்து தமிழகத்தில் இருந்து வரவழைக்கப்பட்ட 4 மோப்ப நாய்களும் பணியில் இணைந்துள்ளன.

ராணுவம் மற்றும் காவல் துறை ஹெலிகாப்டர்களும் தாழ்வாக பறந்து சென்று தேடும் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

ராணுவம், மாநில காவல் துறை உட்பட 1,300-க்கும் மேற்பட்டோர் மீட்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். இதுவரை 9,328 பேர் மீட்கப்பட்டு 94 நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இதுவரை 279 உடல்கள் பிரேத பரிசோதனை செய்யப்பட்டுள்ளன. இதில் 107 உடல்கள் உறவினர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளன என கேரள அரசு தெரிவித்துள்ளது.

நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட முண்டக்கை, சூரல்மலை பகுதிகளை இணைக்கும் வகையில் ராணுவத்தினர் 190 அடி நீளத்துக்கு தற்காலிக பாலம் அமைத்துள்ளனர். இதற்கான இரும்பு தளவாடங்கள் பெங்களூருவில் இருந்து 20 லாரிகளில் கொண்டு வரப்பட்டன. மெட்ராஸ் இன்ஜினீயரிங் குழுவை சேர்ந்த 144 அதிகாரிகள் 31 மணி நேரத்தில் இந்த புதிய பாலத்தை அமைத்தனர். இந்தகுழுவின் தலைவர் மேஜர் சீதா கூறும்போது, "எங்கள் வீரர்கள் இரவு, பகலாக உழைத்து மிக குறுகிய காலத்தில் பாலத்தை அமைத்துள்ளனர். முதல் நாளில் 25 ஆம்புலன்ஸ் வாகனங்கள் பாலத்தை கடந்து சென்றன" என்றார். கேரளாவில் முகாமிட்டுள்ள காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி, பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி ஆகியோர் நேற்று முண்டக்கை பகுதியை 2வது நாளாக பார்வையிட்டனர். அவர்கள் ராணுவ அதிகாரிகளிடம் கள நிலவரத்தை கேட்டறிந்தனர். கேரள முதல்வர் பினராயி விஜயன் நேற்று வயநாட்டில் மீட்பு பணிகளை ஆய்வு செய்தார். பின்னர் வயநாடு ஆட்சியர் அலுவலகத்தில் நடந்த அனைத்து கட்சி கூட்டத்தில் பங்கேற்றார்.

கோழிக்கோடு, வயநாடு, கண்ணூர், காசர்கோடு பகுதிகளில் நாளை வரை கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வயநாடு பகுதியில் தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது.

வயநாடு நிவாரணப் பணிகளுக்காக, கேரள முதல்வர் நிவாரண நிதிக்கு பிரபலங்கள் நன்கொடை அளித்து வருகின்றனர்.

விக்ரம் ரூ.20 லட்சம் வழங்கிய நிலையில் ராஷ்மிகா மந்தனா ரூ.10 லட்சம் வழங்கினார். சூர்யா, கார்த்தி, ஜோதிகா மூவரும் ரூ.50 லட்சம் வழங்கினர். நயன்தாரா- விக்னேஷ் சிவன் இணைந்து ரூ.20 லட்சமும் மோகன்லால் ரூ.25 லட்சம், மம்மூட்டி ரூ.20 லட்சம், துல்கர் சல்மான் ரூ.15 லட்சம் என நிவாரண நிதி வழங்கியுள்ளனர்.

வயநாடு மாவட்டத்தில் கோட்டப்படி, வெள்ளர்மலை , திருக்கை பற்றா ஆகிய 3 கிராமங்களை, முழுமையான இயற்கை சீற்றம் பாதித்த பகுதிகளாக கேரள மாநில அரசு அறிவித்துள்ளது.

இதன்படி இயற்கை சீற்ற நிவாரண நிதியுதவி சட்டப்படி இங்கு வசிக்கும் மக்களுக்கும் மற்றும் உயிரிழந்தவர்களின் உறவினர்களுக்கும் விரைவில் கிடைக்க இந்த அறிவிப்பு வழி வகுக்கும் என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.

# கவிப்பேரரசு வைரமுத்து வரிகளில் தேனிசை தென்றல் தேவாவின் குரலில் 'கெவி' படத்திற்காக உருவாகியுள்ள 'மலைவாழ் மக்கள் கீதம்'

சென்னை, 03 ஆக்ஸ்ட் 2024: ஆர்ட் அப் ட்ரையாங்கிள்ஸ் பிலிம் கம்பெனி சார்பில் தயாராகி வரும் படம் 'கெவி'. இயக்குநர் தமிழ் தயாளன் இயக்கத்தில் உருவாகியுள்ள இந்த படத்தில் அறிமுக நாயகன் ஆதவன் கதாநாயகனாக நடிக்க, 'டு லெட்', 'மண்டேலா' புகழ் ஷீலா ராஜ்குமார் கதாநாயகியாக நடித்துள்ளார். விஜய் டிவி ஜாக்குலின், சார்லஸ் வினோத், சிதம்பரம் சங்கரபாண்டியன், தர்மதுரை ஜீவா, விவேக் மோகன் மற்றும் உமர் பரூக் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்

கொடைக்கானல் மலைப்பகுதியில் அமைந்துள்ள கெவி என்கிற கிராமத்தை சுற்றி, அந்த பகுதியில் வசிக்கும் மலைவாழ் மக்களின் வாழ்க்கையை மையப்படுத்தி இந்த படம் உருவாகி உள்ளது. இந்த படத்திற்கு அறிமுக இசையமைப்பாளர் ஜி.பாலசுப்பிரமணியன் இசையமைத்துள்ளார்.

படத்தின் முக்கியமான காட்சியில், கதைக்களத்தில் வசிக்கும் மக்களின் வாழ்க்கை முறையை சொல்லும் விதமாக, "மா மலையே - எங்க மலைச் சாமியே ஓம் மடியில் - எங்க உசுரு கெடக்குதே இத்துப்போன சாதிசனம் என்னைக்காச்சும் வாழுமா? மூங்கில் மரத்துல - உள்ள முள்ளு பழுக்குமா?" என்கிற ஓபனிங் பாடல் ஒன்றை கவிப்பேரரசு வைரமுத்து எழுதியுள்ளார். இந்த பாடலை இசையமைப்பாளர் தேனிசை தென்றல் தேவா பாடியுள்ளார்.

இந்த பாடல் ஒலிப்பதிவு செய்யப்பட்டு இன்னும் வெளியாகாத நிலையில் இந்தப்பாடலால் ஈர்க்கப்பட்ட கவிப்பேரரசு வைரமுத்து, தனது



ட்விட்டர் பக்கத்தில் இந்த பாடல் வரிகளை ஒரு வீடியோவுடன் பகிர்ந்து கொண்டு "மலைவாழ் பழங்குடி மக்களின் துயரப் பாடலொன்று.. காட்டுமுள் கிழித்த மாமிசத்தில் வழியும் இரத்தம்.. தேவா உயிர்கலந்து பாடினார் ஒலிப்பதிவில் உடனிருந்தேன்.. பாலசுப்ரமணியம் இசை.. தமிழ் தயாளன் இயக்கம்.." என தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தி உள்ளார்.

இந்த பாடல் உருவான விதம் குறித்து இயக்குநர் தமிழ் தயாளன் கூறும்போது, "இந்த கதைக்கு ஏற்ற வகையிலும் அதேசமயம் ஒட்டுமொத்த மலைவாழ் மக்களின் வாழ்க்கையை சொல்லும் விதமாகவும் ஒரு பாடலை உருவாக்க வேண்டும் என நினைத்தோம். இதற்கான அற்புதமான வரிகளை கவிப்பேரரசு வைரமுத்து கொடுத்தார். இந்த பாடலை எழுதி முடித்ததுமே இது மலைவாழ் மக்களின் கீதமாக இருக்கும் என கவிப்பேரரசு வைரமுத்து கூறினார். அதற்கேற்ப இந்த பாடல் கேட்பவர் மனதில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும் விதமாக, நம்மை சேர்ந்த ஒருவர் இதை பாடுகிறார் என எண்ண வைக்கும் விதமாக இருக்கவேண்டும் என்பதற்காக தேனிசை தென்றல் தேவாவை இந்த பாடலை பாடும்படி கேட்டுக் கொண்டோம். அவரும் முற்றிலும் வித்தியாசமான பாணியில் இந்த பாடலை பாடியுள்ளார்.

கொடைக்கானல் மலைப்பகுதியிலேயே கிட்டத்தட்ட 110 நாட்கள் தங்கி இந்த படத்தின் படப்பிடிப்பை நடத்தியுள்ளோம். எங்களது மூன்று வருட தவம் இந்த படம் என்று சொல்லலாம். இந்த பாடல் வெளியாகும்போது நிச்சயமாக மலைவாழ் மக்களின் கீதம் என சொல்லும் விதமாக ரசிகர்களிடம் வரவேற்பை பெறும் என்பது உறுதி" என்று கூறுகிறார்.

தொழில்நுட்ப கலைஞர்கள் விவரம் தயாரிப்பாளர் ; பெருமாள் ஜி - ஜெகன் ஜெயசூர்யா இணை தயாரிப்பாளர்கள் ; ஜெக சிற்பியன், வருண்குமார், ஆதவன், உமர் ஃபரூக், மணி கண்ணன் எழுத்து ஙூ இயக்கம் ; தமிழ் தயாளன் பாடல் ; கவிப்பேரரசு வைரமுத்து பாடகர் ; தேனிசைத் தென்றல் தேவா இசை ; பாலசுப்பிரமணியன் ஜி ஒளிப்பதிவு ; ஜெகன் ஜெயசூர்யா படத்தொகுப்பு ; ஹரி குமரன் சண்டை பயிற்சி ; டான் அசோக் வசனம் ; ராசி தங்கதுரை, கிருபாகரன் ஏசய்யா மக்கள் தொடர்பு ; ஏ. ஜான்

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி
சனிக்கிழமை,
ஆகஸ்ட் 03, 2024

# கவிஞர் வைரமுத்துவுக்கு முத்தமிழ்ப் பேரறிஞர் பட்டம் தமிழ் இசைச் சங்கம் வழங்குகிறது



சென்னை, 03 ஆக்ஸ்ட் 2024: மதுரைத் தமிழ் இசைச் சங்கம் 50 ஆண்டுகள் கடந்து இந்த ஆண்டு பொன்விழா கொண்டாடுகிறது. அந்த விழாவில் கவிஞர் வைரமுத்துவுக்கு ‘முத்தமிழ்ப் பேரறிஞர்’ என்ற பட்டம் வழங்கப்படுகிறது. இந்தப் பட்டமானது 1லட்சம் ரூபாய், பொற்கிழி, பதக்கம் மற்றும் பட்டயம் கொண்டது. ஆகஸ்ட் 5ஆம் தேதி மதுரை ராஜா முத்தையா மன்றத்தில் நடைபெறும் விழாவில், அமைச்சர் தங்கம் தென்னரசு, மதுரைத் தமிழ் இசைச் சங்கத் தலைவர் ஏ.சி.முத்தையா, தேவகி முத்தையா உள்ளிட்டோர் கலந்துகொள்கிறார்கள். கர்நாடக இசைப் பாடகியும் சமயச் சொற்பொழிவாளருமான விசாகா ஹரி பொற்கிழி பெறுகிறார்.

கவிஞர் வைரமுத்து வாழ்க்கைக் குறிப்பு:

பழைய மதுரை மாவட்டமாய் விளங்கிய இன்றைய தேனி மாவட்டத்தில் வைகை அணையை ஒட்டியுள்ள மெட்டூரில் 1953ஆம் ஆண்டு கவிஞர் வைரமுத்து பிறந்தார். தந்தை ராமசாமித் தேவர்; தாயார் அங்கம்மாள்.

உயர்நிலைப் பள்ளிப்படிப்பை வடுகபட்டியில் முடித்த வைரமுத்து சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் எம்.ஏ படித்துத் தங்கப்பதக்கம் பெற்றார். இவர் எழுதிய ‘வைகறை மேகங்கள்’ என்ற கவிதை நூல் இவர் கல்லூரியில் படிக்கும்போதே ஒரு மகளிர் கல்லூரிக்குப் பாடமாக விளங்கியது. கல்லூரிப் படிப்பை முடித்த கவிஞர் வைரமுத்து தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையத்தில் மொழிபெயர்ப்பாளராகச் சிறிதுகாலம் பணியாற்றினார்.

1980ஆம் ஆண்டு பாரதிராஜாவின் நிழல்கள் படத்தில் ‘பொன்மாலைப் பொழுது’ என்ற பாடலின் மூலம் பாடலாசிரியராக அறிமுகமானார். இதுவரை 8000 பாடல்கள் எழுதியுள்ள கவிஞர் வைரமுத்து, இந்தியாவின் சிறந்த பாடலாசிரியருக்காக 7முறை தேசிய விருது பெற்றிருக்கிறார்.

திரைப்பாட்டு - இலக்கியம் என்று இரண்டு துறைகளிலும் சிகரம்தொட்ட வைரமுத்து தனது கள்ளிக்காட்டு இதிகாசம் நூலுக்காக சாகித்ய அகாடமி விருது பெற்றிருக்கிறார். அது 22 இந்திய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு வருகிறது.

இந்தியாவின் உயர்ந்த விருதுகளான பத்மஸ்ரீ மற்றும் பத்மபூஷண் விருதுகளையும் பெற்றிருக்கிறார்.

அந்நாள் இந்தியக் குடியரசுத் தலைவர் ஆ.ப.ஜெ.அப்துல்கலாம் இவரைக் ‘காப்பியக் கவிஞர்’ என்று கொண்டாடினார். அந்நாள் இந்தியப் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய் இவரைக் ‘கவிசாம்ராட்’ என்று பாராட்டியிருக்கிறார். தமிழ்நாட்டின் அந்நாள் முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி இவருக்குக் ‘கவிப்பேரரசு’ என்று பட்டம் தந்திருக்கிறார்.

உலகின் 5 கண்டங்களிலும் தமிழ் இலக்கியப் பயணம் செய்தவர். அண்மையில் இவர் எழுதிய ‘மகாகவிதை’ என்னும் பெருங்கவிதை நூலுக்கு மலேசியன் இந்தியக் காங்கிரஸ் மற்றும் தமிழ்ப்பேராயம் இணைந்து ஒரு லட்சம் ரிங்கிட் (இந்திய மதிப்பில் 17லட்சம்) பரிசு வழங்கின.

இதுவரை 39 நூல்கள் எழுதியிருக்கும் கவிஞர் வைரமுத்து மூன்று பல்கலைக் கழகங்களின் கௌரவ டாக்டர் பட்டம் பெற்றவராவார். இவரது படைப்புகளை ஆராய்ச்சி செய்து 40க்கும் மேற்பட்டவர்கள் டாக்டர் பட்டம் பெற்றிருக்கிறார்கள். இப்போது தமிழ் இசைச் சங்கம் முத்தமிழ்ப் பேரறிஞர் பட்டத்தை வழங்கியுள்ளது.

# 1:10 பங்கு பிரிப்பு செயல்திட்டம்: ஹசூர் மல்டி பிராஜக்ட் லிமிடெட்-ன் இயக்குநர்கள் குழு ஒப்புதல்

சென்னை, 03 ஆக்ஸ்ட் 2024: பொறியியல், கொள்முதல் மற்றும் கட்டுமான (இ பி சி) ஒப்பந்த சேவைகள் துறையில் முன்னணி நிறுவனமான ஹசூர் மல்டி ப்ராஜெக்ட்ஸ் லிமிடெட்-ன் இயக்குநர்கள் குழு கூட்டம் 2024, ஜூலை 26 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில், நிறுவனத்தின் ஈக்விட்டி பங்குகளை 1:10 என்ற விகிதத்தில் (1 பங்கு முதல் 10 பங்குகளாக பிரிக்கப்படுவது) பிரிப்பதற்கான செயல்திட்டத்திற்கு இயக்குநர்கள் குழு ஒப்புதல் அளித்திருக்கிறது. நிறுவனத்தின் உறுப்பினர்கள் மற்றும் பிற சட்டரீதியான/ஒழுங்குமுறை அதிகார அமைப்புகளின் ஒப்புதல் மற்றும் அனுமதி கிடைக்கப்பெறுவதற்கு இந்த பங்கு பிரிப்பு திட்டம் உட்பட்டதாகும். இந்த ஆண்டின் தொடக்கத்தில், முழுமையாக மாற்றத்தக்க வாரண்டுகளை ஒரு வாரண்டிற்கு ரூ. 300 என்ற வெளியீட்டு விலையில் முன்னுரிமை வெளியீட்டின் மூலம் ரூ.4860 மில்லியன் நிதியை திரட்டுவதற்கு இந்நிறுவனத்தின் இயக்குனர்கள் குழு ஒப்புதல் அளித்திருந்தது. முன்மொழியப்படும் முன்னுரிமை வாரண்ட்டுகளை பெறுபவர்களில் எஃப் ஐ ஐ-கள் மற்றும் இந்நிறுவனத்தின் புரமோட்டர்கள் அல்லாத குழுவிலிருந்து பிற முதலீட்டாளர்களும் இடம்பெறுகின்றனர். அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனத்தை அதிகரிப்பதற்கும் மற்றும் இந்த மூலதன நிதி திரட்டலுக்கான ஒரு குழுவை அமைப்பதற்கும் இதன் இயக்குனர்கள் குழு ஒப்புதல் அளித்திருந்தது. இந்தியாவின் வேகமாக வளர்ந்து வரும் உள்கட்டமைப்பு செயற்பிரிவின் முன்னணியில் ஹசூர் மல்டி ப்ராஜெக்ட்ஸ் லிமிடெட் உள்ளது. உயர்தர மற்றும் நம்பகமான பொறியியல், கொள்முதல் மற்றும் கட்டுமான (இ பி சி) ஒப்பந்த சேவைகளை வழங்குவதற்கான ஒரு தொழிற்பிரிவை உருவாக்கி வளர்ச்சி காண செய்திருப்பதன் மூலம் இதை அது சாதித்திருக்கிறது.

தேசத்தின் கட்டமைப்பு செயல்பாட்டில் அதிகரித்து வரும் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், இத்தொழில்துறையில் ஒரு முக்கிய பங்களிப்பு செய்யும் நிறுவனமாக மிக விரைவாக எச் எம் பி எல் உருவெடுத்துள்ளது. கடந்த சில ஆண்டுகளில், மகாராஷ்டிரா மாநில சாலை மேம்பாட்டுக் கழகத்திற்கான (எம் எஸ் ஆர் டி சி) முன்னணி திட்டங்களை வெற்றிகரமாக மேற்கொண்டு வருவதன் மூலம், குறிப்பிடத்தக்க மைல்கற்களை எச் எம் பி எல் அதன் வளர்ச்சி பயணத்தில் எட்டியுள்ளது. குறிப்பிடத்தக்க வகையில், கோவிட்-19 பெருந்தொற்றால் ஏற்பட்ட சவால்களுக்கு மத்தியிலும், 2019 ஆம் ஆண்டில் வாக்கன் - பாலி நெடுஞ்சாலை திட்டம் இந்நிறுவனத்தால் வெற்றிகரமாக முடிக்கப்பட்டது. கௌரவம் மிக்க சம்ருத்தி விரைவுச் சாலையின் தொகுப்பு 11-ன் பணிகளை எடுத்து நிறைவேற்றியதன் மூலம் என் எச் 48 நெடுஞ்சாலைத் திட்டத்திற்கு பங்களிப்பை வழங்கி தனது செயலிருப்பை இந்நிறுவனம் மேலும் வலுப்படுத்தியிருக்கிறது; திட்ட செயலாக்கத்தில் நேர்த்தி நிலை மீதான பொறுப்புறுதியை இதன் மூலம் வெளிப்படுத்தியிருக்கிறது. மேற்கொள்ளப்படும் செயல்திட்டங்களின் வெற்றிக்கு வெற்றிகரமான கூட்டாண்மைகளை உருவாக்குவது அத்தியாவசியமானது; இதில் எச் எம் பி எல் -ன் திறன் அதன் வெற்றிகரமான பயணத்தில் வலுவாக வெளிப்பட்டிருக்கிறது. தொழில்நுட்பம் மற்றும் வர்த்தக அம்சங்கள் ஆகிய இரண்டு பிரிவுகளிலும் திறமையான நிர்வாக குழு, நிலையான வளர்ச்சி மற்றும் வெற்றியை நோக்கி இந்நிறுவனத்தை முன்னெடுத்துச் செல்வதில் முக்கியப் பங்கு வகித்திருக்கிறது. ஒப்புக்கொண்ட கால அளவிற்குள் திட்டங்களை நிறைவேற்றி முடிப்பதிலும், உயர்தரங்களைப் பேணுவதிலும், பாதுகாப்பு கோட்பாடுகளுக்கு முன்னுரிமை அளிப்பதிலும் கொண்டிருக்கும் பொறுப்புறுதி மற்றும் அர்ப்பணிப்பு என்ற வலுவான அடித்தளத்தில் எச் எம் பி எல் கட்டமைக்கப்பட்டிருக்கிறது. இந்நிறுவனத்தின் ஒவ்வொரு செயல்முயற்சியிலும் இக்கோட்பாடுகளே அதனை வெற்றிகரமாக வழிநடத்தியிருக்கின்றன.

# “அபர்ணதி அவுட் ஆப் ஸ்டேஷனில் இருப்பதுதான் தமிழ் சினிமாவுக்கு நல்லது” ; தயாரிப்பாளர் சுரேஷ் காமாட்சி காட்டம்




சென்னை, 03 ஆக்ஸ்ட் 2024: வி6 பிலிம் பிரைவேட் லிமிடெட் சார்பில் ஷி.வேலாயுதம் தயாரிப்பில் உருவாகி வரும் படம் ‘நாற்கரப்போர்’.. ஹெச்.வினோத், ராஜபாண்டி உள்ளிட்ட இயக்குநர்களிடம் இவர் உதவி இயக்குநராக பணியாற்றிய இயக்குநர் ஸ்ரீ வெற்றி இப்படத்தை இயக்கியுள்ளார். குப்பை அள்ளும் சமுதாயத்தில் இருந்து வந்த ஒருவன் எப்படி ‘கிராண்ட் மாஸ்டர்’ ஆகிறான் ? அதற்காக அவன் சந்திக்கும் பிரச்சினைகள் என்ன என்பதை சொல்லும் அழகான ஒரு ஸ்போர்ட்ஸ் டிராமாவாக சதுரங்க விளையாட்டை மையப்படுத்தி இந்த ‘நாற்கரப்போர்’ உருவாகி உள்ளது.

தயாரிப்பாளர் சுரேஷ் காமாட்சி பேசும்போது, “இந்த படத்தின் தயாரிப்பாளர் வேலாயுதம் இப்படி ஒரு கதையை தேர்ந்தெடுத்ததற்காக அவருக்கு முதலில் நன்றி சொல்ல வேண்டும். இயக்குநரும் அந்த கதையை மிக நேர்த்தியாக செய்திருக்கிறார். இங்கே வெற்றி தோல்வி என்பது சகஜம்.. நாம் நமது வேலையை சிறப்பாக செய்திருக்கிறோமா என்று தான் பார்க்க வேண்டும். அதன் பிறகு அது ரசிகர்கள் கையில். இங்கே நிறைய தயாரிப்பாளர்கள் தங்கள் முதல் படத்திலேயே நிறைய கசப்பான அனுபவங்களை பெற்றிருப்பார்கள். ஆனால் அந்த அனுபவங்கள் தான் அவர்கள் முதலீடு. அதனால் விட்டதை விட்ட இடத்தில் தான் பிடிக்க வேண்டும். எங்கே தொலைத்தோமோ அங்கே தான் தேட வேண்டும்..

இந்த படத்தில் நடித்த அனைவருமே சிறப்பாக செய்திருக்கிறார்கள். நடிகை அபர்ணதி மிக சிறந்த நடிகை தான். ஆனால் என்ன வருத்தம் என்றால் அவர் இந்த விழாவிற்கு வரவில்லை. நடிகைகள் பிரமோசனுக்கு வர மாட்டார்கள் என்பது தமிழ் சினிமாவில் தொடர்ந்து இது ஒரு சாபக்கேடாகவே மாறிவிட்டது. அபர்ணதியை இந்த படத்தின் புரமோஷன் நிகழ்ச்சிக்கு அழைத்த போது அதற்கு தனியாக பணம் கொடுக்க வேண்டும் என தயாரிப்பாளரிடம் கேட்டுள்ளார். இது உண்மையிலேயே புதிதாக இருக்கிறது. அதைத் தொடர்ந்து நானே அந்த பெண்ணிடம் போன் செய்து பேசினேன். அப்போது இந்த நிகழ்ச்சிக்கு மூன்று லட்சம் ரூபாய் பணம் கொடுத்தால் மட்டுமே வர முடியும் என்று அவர் சொன்னதுடன் அவர் அமரும் மேடையில் அவர் அருகில் யார் யார் உட்கார வேண்டும் என்பது போன்று அவர் போட்ட நிபந்தனைகளை எல்லாம் சொன்னால் அது இன்னும் சர்ச்சையாக மாறிவிடும். ஆனால் இரண்டு நாட்கள் கழித்து அவரே போன் செய்து, ஸாரி சார்.. நான் தெரியாமல் பேசி விட்டேன். மன்னித்து விடுங்கள். நான் புரமோஷன் நிகழ்ச்சிக்கு வருகிறேன் என்று கூறினார். ஆனால் இன்று வரவில்லை. கேட்டதற்கு அவுட் ஆப் ஸ்டேஷன் என்று கூறி விட்டார்கள். தமிழ் சினிமாவிற்கு இப்படிப்பட்ட நடிகைகளே தேவையில்லை. அவர் அப்படியே அவுட் ஆப் ஸ்டேஷனிலேயே இருக்கட்டும். உள்ளே வர வேண்டாம். அதுதான் தமிழ் சினிமாவுக்கு நல்லது. இப்படி தயாரிப்பாளர்களை காயப்படுத்தி விட்டு அவர்கள் சினிமாவிற்குள் வந்து என்ன நல்லது செய்யப் போகிறார்கள். இந்த படத்திற்கு தொடர்பே இல்லாத கோமல் சர்மா, நமீதா ஆகியோரே முன்வந்து கலந்து கொண்டிருக்கும்போது படத்தில் நடித்த நடிகைக்கு இதில் கலந்து கொள்வதில் என்ன சிரமம் ?

என்னைப் பொருத்தவரை ஒரு படம் பிடித்தது என்றால் ஏதாவது ஒன்று செய்ய வேண்டும் என மனசுக்குள் தோன்றும். கதையுடன் கூடிய கருத்தும் இருக்க வேண்டும். சமீபத்தில் கூட இயக்குநர் மீரா கதிரவானின் ஒரு படம் பார்த்தேன். இப்போதே குறித்து வைத்துக் கொள்ளுங்கள். அந்த படம் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும். இந்த நாற்கரப்போரில் பேசப்பட்டிருக்கக் கூடிய அரசியல் எனக்கு பிடித்திருக்கிறது. என்னுடைய மிக மிக அவசரம் படத்தில் யாரும் தொடாத ஒரு விஷயத்தை சொன்னது போல இதிலும் இதுவரை யாரும் சொல்லாத ஒரு விஷயத்தை இயக்குனர் தொட்டிருக்கிறார்.